## சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியம் - 2012

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்தின் 2012 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) திணைக்களத்திற்கு அல்லது நிதியத்திற்கு உரித்தற்ற நிர்மாண நடவடிக்கைகளுக்காகச் செலவு செய்யப்பட்ட ரூபா 2,526,551 தொகையானது நிதியத்தின் நிலையான சொத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்ட காரணத்தினால் கட்டிடம் மற்றும் உபகரணங்கள் ரூபா 2,526,551 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) பட்டப்பின் படிப்பு பாடநெறிச் செலவினமாக கணக்கு வைக்கப்பட வேண்டிய ரூபா 400,000 தொகை உள்நாட்டுப் பயிற்சிச் செலவினமாகவும், உள்நாட்டுப் பயிற்சிச் செலவினமாகக் கணக்கு வைக்கப்பட வேண்டிய ரூபா 65,000 தொகை வெளிநாட்டுப் பயிற்சிச் செலவினமாகவும் கணக்கு வைக்கப்பட்டிருந்தன.

(இ) பிழையான கணிப்பீட்டின் காரணத்தினால் நூலகப் புத்தகங்களுக்கான பெறுமானத் தேய்வுக் கணக்கு மற்றும் பெறுமானத் தேய்வு ஒதுக்கக் கணக்கு என்பன ரூபா 31,552 வீதம் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 55,026,631 தொகையான கணனி மற்றும் உப பாகங்கள் அதன் கீழ் தனியான கணக்கில் வரவு வைப்பதற்குப் பதிலாக தளபாடம் மற்றும் அலுவலக உபகரணக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது.

### 1.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

பின்வரும் சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(அ) நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட ரூபா 61,457,369 தொகையான நிலையான சொத்துக்களை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான நிலையான சொத்துப் பதிவேடு, விபரமான பட்டோலை, பௌதீக மெய்மையாய்வு அறிக்கை என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) வெளிநாட்டுப் பயிற்சி மற்றும் கருத்தரங்கிற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 21,915,698 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அதில் பங்குபற்றிய உத்தியோகத்தர்கள் 11 சந்தர்ப்பங்களின் போது தாங்கள் பெற்ற வெளிநாட்டுப் பயிற்சியின் செயல்முன்னேற்றம் தொடர்பாக தயாரிக்கப்பட்ட அறிக்கை கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாட்டு மிகை ரூபா 322,866,312 ஆனதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 232,622,256 ஆக இருந்தமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 90,244,056 தொகையான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. நிதியத்தின் தண்டப்பண வருமானம் முன்னைய ஆண்டை விட 292 சதவீதத்தினால் அதிகரித்தமை, உள்நாட்டு, வெளிநாட்டு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கான செலவினம் 23 சதவீதத்தினால் குறைவடைந்தமை நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்கு அடிப்படையாகத் தாக்கமளித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் நிதியத்தின் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான நிதி விளைவுகளின் பகுப்பாய்வு கீழே காட்டப்படுகின்றது.

| வருமானம் | 2012 ஆம் ஆண்டு | 2011 ஆம் ஆண்டு | அதிகரிப்பு /(குறைவு) | | வருமானத்தின் சதவீதமாக செவினம் | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 2012 | 2011 |
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 | % | % | % |
| தண்டப் பணமும் கைப்பற்றப்பட்ட பொருட்கள் விற்பனையும் | 361,769 | 281,485 | 80,284 | 28.52 | | |
| ஏனைய பெறுவனவுகள் | 651 | 517 | 134 | 25.92 | | |
| வருமானக் கூட்டுத்தொகை | **362,420** | **282,002** | **80,418** | **28.52** | | |
| செலவினம் | | | | | | |
| உள்நாட்டுப் பயிற்சி | 10,460 | 12,233 | (1,773) | (14.49) | 2.89 | 4.33 |
| வெளிநாட்டுப் பயிற்சி | 21,916 | 30,124 | (8,208) | (27.25) | 6.05 | 10.68 |
| பட்டப்பின் படிப்பு கற்கைநெறி | 2,600 | - | 2,600 | - | 0.72 | - |
| கூட்டுத்தொகை | **34,976** | **42,357** | **(7,381)** | **17.43** | **9.65** | **15.02** |
| ஏனைய செலவினம் | 4,578 | 7,023 | (2,445) | (34.81) | 1.26 | 2.49 |
| மொத்தச் செலவினம் | 39,554 | 49,380 | (9,826) | (19.90) | 10.91 | 17.51 |
| **மிகை** | **322,866** | **232,622** | **90,244** | **38.79** | | |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) சுங்க பரிசோதனையினூடாக கைப்பற்றப்பட்ட பொருட்களுக்காக விதிக்கப்படும் தண்டப் பணம் மற்றும் கைப்பற்றப்பட்ட பொருட்களின் விற்பனையால் கிடைத்த வருமானத்தில் 50 சதவீத அளவு வெகுமதிக்காக ஒதுக்கீடு செய்ததன் பின்னர் எஞ்சிய 50 சதவீத தொகையில் 40 சதவீதம் சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ மற்றும் இழப்பீட்டு நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்ட போதிலும் இந்நிதியத்தின் பிரதான நோக்கம் பின்வருமாறு இருந்தது.

- சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ திறனை மேம்படுத்துவதற்காக உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு பயிற்சிகளுக்காக ஏற்படும் செலவினங்களை தீர்த்துவைத்தல்
- விபத்துக்களுக்கு உட்படும் உத்தியோகத்தர்களுக்கு இழப்பீடு வழங்குதல்

எவ்வாறாயினும் சுங்க முகாமைத்துவ திறனை மேம்படுத்துவதற்காகவும் உத்தியோகத்தர்களுக்கு இழப்பீடுகளை செலுத்துவதற்காகவும் விசேட அடிப்படைகள் இனங்காணப்படாலும் இந்நிதியத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்தமையால் நிதியத்தின் திரண்ட மீதியில் வருடாந்தம் அதிகரித்துச் செல்லும் போக்கொன்று அவதானிக்கப்பட்டது. அதன் பிரகாரம் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தின் திரண்ட மீதி ரூபா 3,410,133,201 ஆக இருந்தது. மேலும் 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் நிதியத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகைகளில் ஒட்டு மொத்தப் பயன்பாடு முறையே 17.51% ஆகவும் 10.91% ஆகவும் இருந்தன.

(ஆ) முன்னைய இரண்டு ஆண்டுகளின் செலவினங்களின் தன்மையைப் பரீட்சித்தபோது வெளிநாட்டுப் பயிற்சி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற உத்தியோகத்தர்களின் கிரயத்தை ஈடுசெய்வதற்காக இந்நிதியம் அடிப்படையாக பயன்படுத்தப்பட்டிருந்தது. முன்னைய ஆண்டிலும் மீளாய்வாண்டிலும் உழைத்த வருமானத்தில் முறையே 10.68 சதவீதம் மற்றும் 6.05 சதவீதம் ஆக வெளிநாட்டு பயிற்சி நடவடிக்கைகளுக்காக செலவிடப்பட்டிருந்ததுடன் அது அவ்வருடங்களின் மொத்தச் செலவில் முறையே 61 சதவீதம் மற்றும் 55 சதவீதம் ஆகும். எனினும் இதன் பிரகாரம் மீளாய்வாண்டின் மொத்தச் செலவினங்களில் வெளிநாட்டுப் பயிற்சிகளின் கிரயம் சதவீத ரீதியாக குறைவடைந்திருந்தது.

(இ) உத்தியோகத்தர்களின் பட்டப்பின்படிப்பு கல்வி நடவடிக்கைகளுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 2,600,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் முன்னைய ஆண்டின் போது எவ்வித தொகையும் செலவிடப்பட்டிருக்கவில்லை.

**3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

மதத் தலமொன்றில் கல்வெட்டுப் பதிவேடுகளைப் பாதுகாப்பதற்கான காப்பகத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 2,526,551 தொகை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்ததுடன் அது நிதியத்தின் நோக்கங்களுக்கு முரணான செலவினமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டின்போது உள்ளபடியான மற்றும் பாதிடப்பட்ட வருமானத்திற்கும் செலவினத்திற்கும் இடையே 30 சதவீத்திற்கு மேற்பட்ட முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு சிறந்த கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளிலுள்ள குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) சுங்க உத்தியோகத்தர்களின் முகாமைத்துவ திறனை மேம்படுத்தல்
(ஆ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(இ) நிதியப் பயன்பாடு
(ஈ) கணக்கீடு
(உ) செலவினக் கட்டுப்பாடு